தென்னிந்தியாவின் இரும்பு மனிதர் நமது முதல்வர்!

ஏழைகளே இருக்கக் கூடாது என்பதற்காகவே ஆட்சி செய்பவர் 'திராவிட மாடல்' நாயகர்!

சட்டப்பேரவையில் – உத்திரமேரூர் க.சுந்தர் பேச்சு!

சென்னை, மார்ச் 20 – சட்டப்பேரவையில் பட்ஜெட் – வேளாண் பட்ஜெட் மீதான விவாதத்தில் உத்திரமேரூர் தொகுதி உறுப்பினர் க.சுந்தர் பேசுகையில், தென்னிந்தியாவின் இரும்பு மனிதர் நமது முதல்வர் என்றும் ஏழைகளே இருக்கக் கூடாது என்பதற்காகவே திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார் திராவிட மாடல் ஆட்சியில் நாயகர் முதல்வர் என்றும் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் பட்ஜெட் - வேளாண் பட்ஜெட் மீதான விவாதத்தில் உத்திரமேரூர் தொகுதி உறுப்பினர் க.சுந்தர் பேசியதாவது:-

2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, வேளாண்மை நிதிநிலை அறிக்கை இரண்டின்மீதும் பேசுவதற்கு வாய்ப்பளித்த, இந்தியாவின் number 1 முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர், துணை முதல்வர் உள்ளிட்ட அமைச்சர் பெரு மக்களுக்கும், சட்டமன்ற கட்சி தலைவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவையின் உள்ளே, வெளியே இருக்கின்ற அனைவருக்கும், என்னை பேச அழைத்த தங்களுக்கும் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிகழ் காலத்தைப் பாடமாக்கியும், எதிர்க்காலத்தைப் பாதையாக்கியும் பயணிக்கும் திராவிட மாடல் ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்ச் சமூகம் கடக்க வேண்டிய தூரத்தை யும், களைய வேண்டிய துயரத்தையும், காக்க வேண்டிய உயரத்தையும் உணர்ந்து தயாரிக்கப்பட்டதே இந்த நிதி நிலை அறிக்கை. இதன் மீதான விவாதத்தில் பங்கெடுத்து உரையாற்றுவதில் நான் பெருமைப்படுகிறேன். முதலில் நான், நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், செய்யூர் தொழிற்பேட்டை அமைக்கப்படும், செய்யூர் தொகுதியில் ஓர் அரசு கல்லூரி, காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனையைத் தரமுயர்த்த ரூ.120 கோடி நிதிஒதுக்கீடு, சென்னைகாஞ்சிபுரம்வேலூர் Metro Rail பாதை, அதேபோல

சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம் Metro Rail, செய்யாறு, ஒரக்கடம் தொழில்தட திட்டம், சாலவாக்கம் I.T.I., கருங்குழி மாமல்லபுரம் ECR இணைப்புச் சாலை நான்கு வழிச் சாலையாக மாற்றுவது போன்ற பல நல்ல திட்டங்களை எல்லாம் இந்த நிதி நிலை அறிக்கையிலே வழங்கியிருக்கிறார்கள். அதற்காக நாங்கள் நெஞ்சார்ந்த நன்றியை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உழவர் நல சேவை மையங்கள்!

My steps are measured என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா, அவருடைய வழியிலே நம் முதல்வர் அவர்கள் கவனமாக அடியெடுத்து வைக்கின்றார்கள். தமிழ்நாட்டை படிப்படியாக உயர்த்த வேண்டுமென்ற அவருடைய நோக்கம் இந்த நிதி நிலை அறிக்கையிலே வெளிப்படுகின்றது. 2025-2026 ஆம் ஆண்டில், 35 இலட்சம் ஏக்கர் பரப்பிலானப் பயிர்களைக் காப்பீடு செய்வதற்காக 841 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு, வேளாண்மை செழித்திடும் வகையில், ஆயிரம் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அமைப்பது வரவேற்கத்தக்கது.

நெல்லுக்கு ஊக்கத் தொகை வழங்கி, கொள்முதல் நிலையங்களை தமிழ் நாட்டில் அமைத்திருப்பது, நெல் பயிரிடும் விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. நம்முடைய உறுப்பினர் இங்கே சொன்னதுபோல, கரும்புக்குடன் ஒன்றுக்கு 349 ரூபாய் ஊக்கத்தொகை நம்முடைய அரசு வழங்குவது என்பது, தேர்தல் அறிக்கையிலே திராவிட முன்னேற்றக் கழகம் அளித்த அந்த 4,000 ரூபாயைத் தொடுவதற்காகத்தான். ரூ.349 என்பதே round ஆக ரூ.3,500/ வருகிற வகையிலே, இன்னும் ஓர் ஆண்டு இருக்கிறது, ரூ.4,000/ ஆக உயர்த்துகிற அந்த வாய்ப்பையும் நம்முடைய அரசு செய்யும். இதில், கரும்பின் குறைந்தபட்ச ஆதார விலை ஒன்றிய அரசின் கையில் இருக்கிறது. அதற்கும் நமது அரசு ஒன்றிய அரசை வலியுறுத்தும் என்று நான் நினைக்கிறேன். அதைபோல

திருக்குறளுக்கு பெருமை சேர்த்த முதல்வர்!

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே

என்று திருமூலர் சொன்னார். தமிழில் இயற்றப்பட்ட திருக்குறளை, ஐக்கிய நாடுகளின் 193 அலுவல் மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்ட நூல் என்ற பெருமையை வழங்க இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன். சற்றுமுன் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அய்யன் திருவள்ளுவர் சிலையை இந்தியாவின் தென்கோடி குமரி முனையிலே, 2000, புத்தாயிரம் ஆண்டிலே அங்கு சிலையை அமைத்து திருவள்ளுவருக்கு பெருமை சேர்த்தவர் நம்முடைய ஒப்பற்றத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், அவருடைய வழியிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், திருக்குறளுக்கு இன்றைக்கு பெருமையைச் சேர்த்திருக்கிறார்.

அதேபோல், சென்னையில் மட்டும் நடந்த புத்தகக் கண்காட்சி, இன்றைக்கு மாவட்டங்களிதோறும் பொது மக்களுக்குப் புத்துணர்ச்சி தரக் கூடிய ஒரு திருவிழாவாக தொடர்ந்து நடப்பதும், அதைத் தொடர்ந்து தமிழர்கள் அதிகம் வசிக்கும் புதுதில்லி, மும்பை, பெங்களூரு, கொல்கத்தா, திருவனந்தபுரம் போன்ற இந்திய பெரு நகரங்களிலும், சிங்கப்பூர், கோலாலம்பூர் மற்றும் துபாய் போன்ற அயல் நாட்டு நகரங்களிலும் தமிழ் புத்தகக் கண்காட்சிகள் இந்த ஆண்டு முதல் நடத்தப்படும் என்று சொல்லியிருப்பது தமிழுக்குப் பெருமை சேர்க்கக்கூடியது. தமிழ் செம்மொழியின் பெருமையையும், தமிழ் பண்பாட்டின் சிறப்பினையும் உலகத் தமிழ் இளைஞர்களிடையே பரவிடச் செய்யும் வகையில் உலகத் தமிழ் Olympiad போட்டி, அதுவும் தமிழினுடைய பெருமையை இந்த உலகிற்கு உணர்த்தும் என்று அறிகிறேன்.

அதைப்போல 5,300 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழன் இரும்பின் பயன்பாடு பற்றி அறிந்தவன் என்ற அந்த ஒரு நிகழ்வை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உலகத்திற்கு அறிவித்திருக்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதை உலகத்திற்கு உணர்த்தியிருக்கின்ற முதலமைச்சர் அவர்களை நாங்கள் வணங்கி மகிழ்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

தாயுமானவர் நமது முதல்வர்!

ஏழைகள் இருக்கும் வரை இலவசம் இருக்கும் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர், அதனை மகளிர் உரிமைத் தொகையாக்கிய தாயுமானவர் தான் நம் முதல்வர். விடியல் பயணம், மக்களைத் தேடி மருத்துவம், மக்களுடன் முதல்வர், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன், நம்மைக் காக்கும் 48, நான் முதல்வன் கல்லூரிக் கனவு திட்டம், இல்லம் தேடிக் கல்வி, தோழி விடுதி, அன்புச் சோலை என்று பல சிறப்பான திட்டங்களை வழங்கியிருக்கின்ற இந்த திராவிட மாடல் ஆட்சியில், தற்போது சட்டப் பேரவையில், நாய் கடித்தால் ரூ.4,000/ என்று சொன்னதை, ஒரு மணி நேரத்தில் ரூ.6,000/ஆக உயர்த்திக் கொடுத்ததும் இந்த திராவிட மாடல் ஆட்சிதான். நம்முடைய திராவிட மாடல் முதல்வர்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, இந்த ஆட்சியில் கலைஞர் கனவு இல்லம் இரண்டாவது ஆண்டாக தொடர்வது சிறப்பு. குடிசைகளே இல்லாத தமிழ்நாடு வேண்டும் என்று ஆட்சிப் புரிந்தவர் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

ஏழைகளே இருக்கக் கூடாது என்று ஆட்சி புரிபவர் நம்முடைய திராவிட மாடல் நாயகர் என்பதை நான் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே விளையாட்டு துறையில் முதன்மை மாநிலமாவதற்கு பல முன்னோடி திட்டங்களை 4 ஆண்டுகளாக நம்முடைய அரசு முன்னெடுத்துள்ளது. துணை முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, 4,454 வீரர்களுக்கு ஊக்கத்தொகையாக 151 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 சதவிகித இட ஒதுக்கீட்டில் 93 வீரர்களுக்கு அரசு மற்றும் பொதுத் துறையில் வேலை வாய்ப்பு.

விளையாட்டுத் துறையில் சாதனை நீகழ்த்தும் துணை முதல்வர்!

செஸ் விளையாட்டின் தலைநகராமாக இன்றைக்கு தமிழ்நாடு இருக்கின்றது. 2 உலக சாம்பியன், 31 Grand Masters தமிழ் மண்ணிலிருந்து உருவாகியுள்ளனர். உலக சாம்பியனாக வெற்றி பெற்ற குகேஷ் அவர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 5 கோடி ரூபாய் வழங்கி, பெருமைப்படுத்தியுள்ளார். இந்த வெற்றிகளை தக்க வைக்க பள்ளி பாடத்தில் உடற்கல்வி பாட திட்டம் மாற்றியமைக்க இருப்பதும், வரவேற்கத்தக்கது. முதலமைச்சர் அவர்கள் கல்வியையும், சுகாதாரத்தையும் இரண்டு கண்கள் என போற்றி ஆட்சி செய்கின்றார். அதைப்போலவே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் பல சாதனைகளை செய்ய துடிப்பவர் துணை முதலமைச்சர் அவர்கள். அவரையும் நாங்கள் வாழ்த்தி வரவேற்கிறோம்.

நெருக்கடியான சூழலிலே 2 ஆயிரம் கோடி ரூபாயை இழந்தாலும், இருமொழி கொள்கையை விட்டுத்தர மாட்டோம் என, கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று தன்மானம் காத்தவர்தான் முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மானமிகு சுயமரியாதை க்காரரின் வழி வந்தவர் நம் முதல்வர் என்பதை இன்றைக்கு நிரூபித்திருக்கின்றார்.

அதைப்போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்ற அண்ணாவின் கனவை அற்புதமாக சொன்னார்.

தென்னிந்தியாவின் இரும்பு மனிதர்!

ஆனால், இன்றைக்கு இங்கே எனக்கு முன்னர் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஒன்றியத்திலே இருப்பவர்கள் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் மாநிலங்களுக்கு இழைக்கின்ற அந்த அநீதியைக் கண்டு நம்முடைய முதல்வர் அவர்கள், இன்றைக்கு தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக துணிச்சலாக போராடுகின்றார். வரி புலி 8 அடி பாயுமென்றால், வேங்கை புலி 32 அடி பாயும் என்கின்ற வகையிலே, புலிக்கு பிறந்தது பூனையாகுமா என்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் உரிமைகளுக்காக தமிழ்நாடு போராடும், அதேநேரத்தில் உங்களிடத்தில் நாங்கள் அறவழி பாதையிலே போராடி, தமிழ்நாடு வெல்லும் என்கின்ற முழக்கத்தை வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் முதலமைச்சர் அவர்களின் பின்னால், தமிழ்நாடு திரண்டிருப்பது மட்டுமல்ல, தென்னிந்தியாவில் இருக்கின்ற அனைவரும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். தென்னிந்தியாவின் இரும்பு மனிதனாக நம்முடைய முதலமைச்சர் திகழ்கிறார் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்து க்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதல்வரின் கிராம சாலைகள் திட்டம், ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகவும், முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம், நெடுஞ்சாலை துறையின் மூலமாகவும், தமிழ்நாடு முழுவதும் சாலைகள் சீரமைக்கப்பட்டு, போக்குவரத்திற்கு பயனுள்ளதாக மாற்றப்படுகிறது. இதில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக சாலைகளெல்லாம் நான்கு வழிச் சாலைகளாக மாற்றப்படுகின்ற பொழுது, அங்கே சுங்க வரி வசூலிக்கப்பட மாட்டாது. இது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, சீரமைக்க முடியாத வீடுகளுக்கு பதிலாக புதிதாக 25 ஆயிரம் வீடுகள் கட்டித்தர 600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதும் மிகவும் வரவேற்கத்தக்கது.

செல்வப் பிள்ளாய்! இன்று புவியில் பெண்கள் சிறுநிலையில் இருக்கவில்லை! விழித்துக் கொண்டார்!

என்றார் புரட்சி கவிஞர் பாரதிதாசன். பாரதிதாசன் மட்டுமா புரிந்து கொண்டார். இந்த அரசும் புரிந்து கொண்டதால்தான் பெண்களுக்கு ஒரு சதவிகித இட ஒதுக்கீடு பத்திரப் பதிவின்போது இருக்கின்றார்கள். இது தந்தை பெரியார் 1929ல் பெண்ணுரிமை மாநாட்டில் அறிவித்து, 60 ஆண்டுகள் கழித்து, நம்முடைய கலைஞர் அவர்கள் சொத்திலே சம பங்கு கொண்டு வந்த அந்த சாதனையும், அதை நினைவு படுத்துவதுபோல இன்றைக்கு ஒவ்வொரு குடும்பத்திலும், அதாவது முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், இந்தத்திட்டங்களெல்லாம் தமிழ்நாட்டில் இருக்கின்ற குடும்ப ங்களில் ஏதாவதொரு ரூபத்தில் பலன் அடைந்திருக்கும் என்று. சொத்தில் சமபங்கு என்பது வசதி படைத்த பெண்களுக்கும் சரி, ஏழை எளிய வீட்டு பெண்களுக்கும் அந்தத் திட்டம் போய் சேர்ந்திருக்கிறது.

அந்த அடிப்படையில் பத்திர பதிவிலும் ஒரு சதவிகிதம் என்பது 100 சதவிகிதம் எல்லா குடும்பங்களுக்கும் போய் சேரும் என்பதை நான் உறுதி செய்கிறேன். அதைப்போலவே பல திட்டங்கள்.

தொகுதி கோரிக்கைகள்!

இந்த சட்டமன்றத்தில் நான் ஒன்றை குறிப்பிடாமல் போனால், நான் என்னுடைய கடமையைச் செய்ய தவறியவன் ஆவேன். குறிப்பாக, 36 ஆண்டுகளுக்கு முன்பு நான் வைத்த அந்தக் கோரிக்கை உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியம் இரண்டாக பிரிக்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை தயவுசெய்து முதலமைச்சர் அவர்களும், துறையின் அமைச்சர் அவர்களும் ஏற்படுத்தி தர வேண்டும்.

அதேபோல மதுராந்தகம் தாலுகா மிகப்பெரிய தாலுகா 9 குறுவட்டங்கள், 196 வருவாய் கிராமங்கள்; பொன்னேரி தாலுகா 232 ஊராட்சிகளை கொண்ட பெரிய தாலுகா. இவைகளையெல்லாம் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பதும் கோரிக்கை. அதேபோல நம்முடைய மதுராந்தகம் கூடுதல் நீதிமன்றம், அங்கே இடவசதி எல்லாம் இருக்கிறது. மதுராந்தகத்திலே கூடுதல் நீதிமன்றத்தை உருவாக்க வேண்டும். வாலா ஜாபாத் அவளூர் இடையே பாலாற்றின் குறுக்கே ஒரு தரைப் பாலம் இருந்தது. வெள்ளத்திலே அடிக்கப்பட்டு, அது சீர்செய்ய ப்பட்டுவிட்டது என்றாலும் உயர் மட்ட பாலம் வேண்டுமென்ற கோரிக்கையை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கின்றோம். அவர் 2005 ஆம் ஆண்டிலே அந்த தரைப் பாலத்தில் 50 முறை இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தவர். எனவே, அதையும் அமைக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி, வாலாஜாபாத்திலே ஒரு தீயணைப்பு நிலையம், உத்திரமேரூர் ஒன்றியம், தாவூர் கிராமத்தில் துவக்கப் பள்ளி, அதேபோல கம்மாளங்குடியிலே ஒரு துணை சுகாதார நிலையம். . .

இந்தியாவிலேயே அதிக கோயில் உள்ள மாநிலம் தமிழ்நாடுதான். இந்த தமிழ்நாட்டில் 50 ஆண்டுகளைக் கடந்து 60 ஆண்டுகளாக திராவிட இயக்கங்கள்தான் ஆட்சி செய்து கொண்டிருக்கின்றன. ஆக நான் இன்று உறுதியாக சொல்கிறேன். இன்னும் 100 ஆண்டுகளுக்கு திராவிட மாடல் ஆட்சிதான் தமிழ்நாட்டிலே இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அன்போடு தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு க.சுந்தர் பேசினார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பேடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
176	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி	Supply of Final super heater tubes and bends
255	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி-2	Supply of Suction casing Bell Mouth for Unit-I CWP
261	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி-2	Supply of Expansion Extraction Bellow for 600MW LPT1
262	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி-2	Supply of Expansion Extraction Bellow for 600MW LPT2
263	மே.பொ/இ-I/வ.செ.அ.மி.நி	Maintenance of HP 803 Bowl mills in Unit 1
264	மே.பொ/இ-I/வ.செ.அ.மி.நி	Maintenance of HP 803 Bowl mills in Unit 2
181	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி	Supply of Water Cooled Evaporator Assembly suitable

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/1106/ஒப்பந்தப்புள்ளி/2025

பெருநகர சென்னை மாநகராட்சி
திடக்கழிவு மேலாண்மை துறை

தி.க.மே.து.ந.க.எண்.அ7 / 0792 / 2025

மின்னணு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

கீழ்க்கண்ட ஒப்பம் கோர கண்காணிப்பு பொறியாளர் (தி.க.மே) அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

வ.எண்	பணிகளின் விவரம்	பணியின் மதிப்பு
1	மண்டலம் - 2, பகுதி - 5, கோட்டம் - 18, மணலி MGR சாலை நாள்தோறும் 10 மெட்ரிக் டன் மறுசுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகளை விஞ்ஞான ரீதியில் எரிக்கும் ஆலை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி	ரூ.58,00,000/-

ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி நாள் : **27.03.2025 பிற்பகல் 3.00 மணிக்குள்**

ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் : **28.03.2025 பிற்பகல் 3.30 மணிக்கு**

ஒப்பந்ததாரர்கள் tntenders.gov.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விவரங்கள் தெரிந்து கொள்ளலாம். முன்வைப்பு தொகை ரூ.58,000/- E-Tender portal மூலம் online பரிவர்த்தனை முறையில் செலுத்த வேண்டும் விவரங்கள் ஒப்ப ஆவணம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 1100 / ஒப்பந்தப்புள்ளி / 2025

கண்காணிப்பு பொறியாளர் (திகமே)

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இரா.வீரமணி தலைமை!

சென்னை கிழக்கில் மனிதநேய விழா: மாபெரும் புகழரங்கம்!

ஸ்ரீமத் தெய்வ சிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆதினகர்த்தர் - குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதினம், நடிகர் விஜயகுமார் - கவிஞர்.சினேகன் - மீரா நாகராஜன்- பிக்பாஸ் முத்துக்குமரன் புகழுரை!

சென்னை, மார்ச் 20 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 29, எல்லோர்க்கும் பெய்யும் மழையானவர்! எப்போதும் மனதில் நிலையானவர்!! எனும் தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. விவசாய அணி சார்பில் மாபெரும் புகழரங்கம் நேற்று (19.03.2025) ஓட்டேரி, எஸ்.ஆர்.பேலஸில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இரா. வீரமணி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், சரிதா மகேஷ்குமார் எம்.சி, இசட் ஆசாத் எம்.சி, புனிதவதி எத்திராசன் எம்.சி, டி.லோகேஷ், லயன் பி.உதயசங்கர், நா.துலுக்காணம், கே.ராஜ்முகமது, எம்.பெரோஸ்கான், ரமணி லோகேஷ் எம்.சி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஸ்ரீமத் தெய்வ சிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆதினகர்த்தர் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம், நடிகர் விஜயகுமார், கவிஞர்.சினேகன், திருமதி. மீரா நாகராஜன், பிக்பாஸ் வெற்றியாளர் முத்துக்குமரன் ஆகியோர் புகழுரைத்தனர்.

இவ்விழாவில் சுரேஷ்குமார், எ.நெடுஞ்செழியன், எஸ்.சக்திவேல், வி.எஸ். தியாகராஜன், எ.ராதாகிருஷ்ணன், ஜெ.கார்த்திகேயன், செங்கை சண்முகம், மு.ரவிச்சந்திரன், டி.பிரகாசம், கே.கோவிந்தன், டி.சுரேஷ், வெற்றிநகர் இ.சிவா ஆகியோர் வரவேற்றனர்.

மேலும், மேயர் ஆர்.பிரியாராஜன், ப. தாயகம்கவிஎம்.எல்.ஏ, என்.கிருஷ்ணமூர்த்தி, தமிழ்ச்செல்வி, சசிகுமார் எம்.சி, மு.சரவணன் எம்.சி. மாநில நிர்வாகிகள்: எம்.டி.ஆர். நாகராஜ், வி.சுதாகர், கோ.ஏகப்பன், ஜி.எம். தேவன், பி.ஜெ.துளசிங்கம், டி.வி.செம்மொழி,

க.வினோத் எல்.பி.எப்.மோகன், சுதாதீன தயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், எல்.சம்பத்குமார், பி.விஜயகுமார், பகுதி நிர்வாகிகள்: அ. கோவிந்தன், கருணாநிதி, வனஜாசண்முகம், அ.கருணாநிதி, அ.சி.தில்லைகதிரவன், பெரம்பூர்.ஆர்.ராஜன், புல்லட்கி.ரமேஷ், பி.புவனவதி, கினார்ஆறுமுகம், வட்டச் செயலாளர்கள் வி.க.வெ ங்கடேசன், எஸ்.வெங்கடேசன், எம்.தமிம், ,பொல்லு, சுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட்.அபோய், எஸ்.புஸ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், பரிமளாசுரேஷ்பாபு, வி.உநகர், ,மாவட்ட பிரதிநிதிகள் எல். சுப்பிரமணி, இரா.புரு ஷோத்தமன், அ.விஜயகுமார், வெல்டிங்எஸ்.பாபு, வே.து.தாயரைச் செல்வன், நெல்லைமா.முத்தையா, பா.பாபுமனேகரன், சி.நாகலிங்கம், ஆ.கதிரவன், எச். திவாகர், ஸ்வீட் பாபு, வி.ஜெகன்னாதன், எம். விஜயகுமார், வ.நாமதேவன், டி.ராஜு, க.எழிலன், எம்.துரைசாமி, ஜெ.அண்ணாதுரை, பி.இளஞ்செழியன், பி.ச த்தீஷ், ஆர்.ராஜராஜன், டி.சீனிவாசன், பிரகாஷ் மற்றும், எல். பாண்டு ரங்கன், பெரம்பூர்ஆர்.மகேஷ், புல்லட்.என்.பாஸ்கர், அ.சேதுராமன், சாவித்திரி அன்பழகன், கோ.கருணாகரன், இரா.தனசேகர், எம்.சண்முகவேல், எஸ்.எல்.நாராயணன், எம்.எஸ்.மைனர்பாபு, பா.ஜலபூஷனம், கே.ராமமூர்த்தி, கேபிள்எஸ்.சுரேஷ், சுரேஷ் கோபி, எஸ்.சதீஷ்குமார், கனல்கங்கா, ஆர். சீனிவாசன், பி.விவேகானந்தன், க.தமிழ்மணி, ஏ.ஜி.எஸ்.கோல்டுஜி, எம்.ஜெய்பால், சி.எம்.மணிகண்டன், ஆர்.கிருஷ்ணவேணி, எச்.ஜியாவுதீன், எம்.அருண்குமார், எஸ். வசந்தா, வி.செந்தில்குமார், ஜி.ராஜ்கு மார், அ.சத்யா, எஸ்.ஜெயகுமார், கே.ஹரிபிரசாத், கே.எம்.கார்டன்.சத்தியா, Dr.வினோத், இளங்கோ, க.ராஜேந்திரன், ஜெ.அவினாஷ், சி.கௌதம், மு.கௌரி, வி.பிரகாஷ், வி. ஜெகன், எஸ்.விஜயலட்சுமி, எஸ்.கே.சிவகுமார், கே.லட்சுமி, இ.எஸ்.ரவிச்சந்திரன், ஆர். தினேஷ், மு.முகமதுரஃபி, எப்.செபஸ்டீன், எம்.விக்னேஷ், அந்தோணிஜான், இ. ஜோசுவா, ஜெ.சத்யமோகன், டி.சங்கர், புரசை பி.சத்தீஸ்குமார், அ.சாக்ரடீஸ், இ.என்.கே.வீரமணி, எல்.ஜான்ருவில், கே.காதர்மீரான், மு.விஜயகு மார், ஜி.ஆர்பகுனர், எம்.ஐ. குமாரசாமி, ஆர்.நிலவழகன், ஜெ.வசந்த்கோகுல், பி.செந்தி ல், ஆர்.சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்புகழரங்கதில் எஸ்.சசிகுமார் நன்றி கூறினார்.

தி.மு.க.
இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்
புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்
இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–4க்கு உட்பட்ட தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-03-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி